17th September 1958]

*Adult education*

* 160 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of Sri K. Ramachandran): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of adult schools in the State.

(*b*) the strength of such schools;

(*c*) whether any target is fixed in this respect every year; and

(*d*) if so, the number of schools to be opened during 1958–59?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) 1,579 on 31st March 1958.

(*b*) 35,689.

(*c*) Yes, Sir.

(*d*) 60 schools.

* 161 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957-ம் வருஷ ஆரம்பத்திலே எத்தனை முதியோர் வாசக சாலைகள் இருந்தன?

(ஆ) இவைகளில் எத்தனை பேர் படித்துக்கொண்டிருந்தார்கள் ?

(இ) ஷி வருஷத்தில் எத்தனை முதியோர் வாசக சாலைகள் மூடப் பட்டன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) 1,644.

(ஆ) 45,850.

(இ) 260.

SRI P. G. MANICKAM: எழுதப்படிக்கத் தெரிந்து கொண்டார்களா என்பதை அறிவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் ஏதாவது பரீட்சை நடத்தப்படுகிறதா ? அம்மாதிரி பரீட்சை நடத்தப்பட்டால் எத்தனை பேர்களுக்கு சர்டிபிகேட்கள் வழங்கப்பட்டன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: அந்த விவரம் என்னிடம் இல்லை.

SRI A. V. P. ASAITHAMBI: சென்னை நகரில் பல மன்றங்கள் முதியோர் கல்வியைப் பரப்புவதற்கு இரவு பள்ளிகளை நடத்துகிறார்கள். அந்தப் பள்ளிகளுக்கு அரசாங்கம் உதவி அளிக்க முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: தேசிய விஸ்தரிப்பு திட்டம், சமுதாய நல அபிவிருத்தி திட்டம் நடக்கக்கூடிய இடங்களில் இந்த உதவி இப்பொழுது அளிக்கப்படுகின்றது. மற்ற இடங்களில் தனிப்பட்டவர்களின் முயற்சியால் நடந்துகொண்டு வருகிறது.

SRI P. S. CHINNADURAI: தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கின்ற பிரதேசங்களில் முதியோர் கல்விச்சாலைகளை அதிகப்படுத்த அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அது கவனிக்கப்படவேண்டிய விஷயம். அதற்காக ஒரு தனித் திட்டத்தை அங்கத்தினர் அவர்கள் சமர்ப்பித்தால், கட்டாயம் அதுபற்றி ஆலோசிக்கப்படும்.